**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 129/2021**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : M. Vasiath Khan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of June, 2025.

**(A1 died. A2 present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது ஆவடி கோவில்பதாகையில் வசித்து வருகிறேன். ஆஜர் 2ஆம் எதிரியை எனக்கு தெரியும். அவர் பெயர் வினோத். நானும் என் அண்ணனும் மார்டன் பாஸ்ட் புட் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறோம். அந்த கடை திருமுல்லைவாயல் அன்னனூரில்

உள்ளது. 19/11/2015 அன்று மாலை 5.00 முதல் 5.30 மணியளவில் மதி என்பவரும், ஆஜர் எதிரி வினோத் என்பவரும் சிக்கன் ரைஸ் சாப்பிட வந்தார்கள். எக்ஸ்ட்ரா பிளேட் கேட்டார்கள். அதை கொடுப்பதற்கு முன்பதாகவே இருவரும் என்னை தேவிடியா பையா என அசிங்கமாக திட்டினார்கள். நான் ஏன் என்னை திட்டுகிறார்கள் என்று கேட்டதற்கு நான் நினைத்தால் கடையே இருக்காது கடையை காலிசெய்துவிடுவேன் என்று கூறினார். என் அண்ணன் ஆயுப்கான் என்னை தடுக்க வந்தார். அப்போது மதியழகன் கத்தி எடுத்து கடையை உடைக்க ஆரம்பித்தார். அருகில் ரெஸ்ட்ரான்டில் தயார் செய்து வைத்திருந்தோம். அதிலுள்ள கண்ணாடி கிளாஸ் அனைத்தும் உடைத்துவிட்டார்கள். என் அண்ணன் தடுக்கபோனார். மதியழகன் கையில் இருந்த கத்தியை வினோத்குமார் பிடுங்கி என் கழுத்தில் வைத்தார். கடையை காலி செய்து போய்விடுங்கள் இல்லை என்றால் வெட்டிவிடுவேன் என்று கூறினார். கடைக்கு வந்த வாடிக்கையாளரிடம் எழுதி வாங்கிக்கொண்டு சென்றோம். திருமுல்லைவாயல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகாரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர்கள் கடையை அடித்து உடைத்ததால் 30,000 ரூபாய்க்கு மேல் தோராயமாக எனக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. சம்பவத்தின்போது ரவீந்தரன் என்பவர் உடனிருந்தார். அமர்சமந்தா என்றொரு மற்றொரு வேலையாள் இருந்தார். என் அண்ணனும் சம்பவத்தின்போது கடையில் தான் இருந்தார். போலீசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 129/2021**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Ayubkhan |
| Father / Husband Name | : Mohammed Ali Khan |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10th day of June, 2025.

**(A1 died. A2 present)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u> :

**<u>முதல் விசாரணை</u>** :

நான் தற்போது ஆவடி கோவில்பதாகையில் வசித்து வருகிறேன். அசா.1 என் தம்பி. ஆஜர் 2ஆம் எதிரியை எனக்கு தெரியும். அவர் பெயர் வினோத்குமார். நானும், என் தம்பியும் சேர்ந்து மார்டன் பாஸ்ட் புட் கடையை அன்னனூரில் நடத்தி வருகிறோம்.

19/11/2015 அன்று மாலை 4.30 மணியிலிருந்து 5.30 மணிக்குள் நான் கடையில் இருந்தபோது என் தம்பியிடம் மதியும் வினோத்தும் பிரைட் ரைஸ் கேட்டுள்ளார்கள். என் தம்பி போட்டுக்கொடுக்கும்போது இன்னொரு பிளேட் கேட்டுள்ளார்கள். அதை எடுத்துக்கொண்டு கொடுப்பதற்குள் அசிங்க அசிங்கமாக தேவிடியா பையா என்று என் தம்பியை திட்டி பக்கத்தில் தயார் செய்து கொண்டிருந்த ரெஸ்ட்ரான்ட்-ன் கண்ணாடியை கத்தியால் மதி உடைத்தார். அப்போது நானும் உடனிருந்தேன். அதை கேட்டபோது அப்படிதான் உடைப்பேன் என்று கூறினார். உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று கூறினார்கள். என் தம்பியின் கழுத்தில் கத்தியை வைத்தார்கள். இதுகுறித்து திருமுல்லைவாயில் காவல் நிலையம் சென்று என் தம்பி புகார் கொடுத்தார். போலீசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். வழக்கு பதிவுசெய்தார்கள். சம்பவத்தின்போது கடையில் வேலை செய்த ரவீந்தரன் மற்றும் சமந்தா ஆகியோர் இருந்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.